# HSBC Bank (Singapore) Limited-இன் 2021-ஆம் ஆண்டின் அறிக்கை

## 31 டிசம்பர் 2021-இல் முடிந்த நிதியாண்டுக்கான வருமான அறிக்கை

| | 2021<br>S$'000 | 2020<br>S$'000 |
|---|---|---|
| வட்டி வரவு | **287,192** | 425,395 |
| கழிக்க: வட்டிச் செலவு | **(37,001)** | (119,370) |
| **நிகர வட்டி வரவு** | **250,191** | 306,025 |
| கட்டண மற்றும் தரகு வரவு | **150,526** | 128,054 |
| கட்டண மற்றும் தரகுச் செலவு | **(37,651)** | (41,824) |
| **நிகர கட்டண மற்றும் தரகு வரவு** | **112,875** | 86,230 |
| நிகர வர்த்தக வரவு | **43,217** | 38,960 |
| மற்ற வரவு | **11,201** | 10,304 |
| **மொத்த இயக்கு வரவு** | **417,484** | 441,519 |
| செலவுகள்: | | |
| - ஊழியர் கட்டணங்கள் | **(126,977)** | (131,021) |
| - உடைமை, இயந்திரகம் மற்றும் இயந்திரத்தின் மதிப்பிறக்கம் | **(8,776)** | (8,951) |
| - புலனாகாத சொத்துகளின் முதலீட்டுத் தள்ளுபடி | **(852)** | (1,618) |
| - மற்ற இயக்குச் செலவுகள் | **(232,315)** | (231,105) |
| நிகர இயக்குச் செலவுகள் | **(368,920)** | (372,695) |
| **கடன் மதிப்புக்குன்றுதல் இழப்புகள் மற்றும் வாராக் கடன்களுக்கு முந்திய இயக்கு இலாபம்** | **48,564** | 68,824 |
| எதிர்பார்த்த வாரா கடன்களில் மாற்றங்கள் மற்றும் கடன் மதிப்புக்குன்றுதல் இழப்புகள் | **6,264** | (30,086) |
| **வரிக்குமுன் இலாபம்** | **54,828** | 38,738 |
| வரிச் செலவு | **(8,650)** | (7,376) |
| **ஆண்டுக்குரிய இலாபம்** | **46,178** | 31,362 |

## நிதிநிலை அறிக்கை 31 டிசம்பர் 2021 நிலவரப்படி

| | 2021<br>S$'000 | 2020<br>S$'000 |
|---|---|---|
| **சொத்துகள்** | | |
| மத்திய வங்கிகளில் உள்ள ரொக்கமும் இருப்பும் | **321,276** | 360,232 |
| சிங்கப்பூர் அரசாங்கக் கருவூல உறுதிச்சீட்டு மற்றும் முதலீட்டு உரிமைகள் | **2,811,628** | 3,626,586 |
| மற்ற அரசாங்கக் கருவூல உறுதிச்சீட்டு மற்றும் முதலீட்டு உரிமைகள் | **282,491** | 640,365 |
| சார்பியச் சொத்துகள் | **10,910** | 2,470 |
| வங்கிகளில் உள்ள நிலுவைகளும் வைப்புகளும், மற்றும் வங்கிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் | **168,360** | 30,230 |
| வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களும் முன்பணங்களும் | **14,721,958** | 14,915,961 |
| நேரடி உடைமை நிறுவனத்திடமிருந்து வரவேண்டியவை | **33,085** | 28,743 |
| சம்பந்தப்பட்ட பெருநிறுவனங்களிடமிருந்து வரவேண்டியவை | **8,933,159** | 8,069,535 |
| மற்றச் சொத்துகள் | **273,788** | 301,029 |
| உடைமை, இயந்திரகம் மற்றும் இயந்திரம் | **105,664** | 114,613 |
| புலனாகாத சொத்துகள் | **1,513** | 1,741 |
| **மொத்த சொத்துகள்** | **27,663,832** | 28,091,505 |
| | | |
| **கடன் பொறுப்புகள்** | | |
| சார்பியக் கடன் பொறுப்புகள் | **35,542** | 29,234 |
| வங்கிகளின் வைப்புத்தொகைகள் மற்றும் இருப்புகள் | **22,851** | 43,028 |
| வங்கி-அல்லாத வாடிக்கையாளர்களின் வைப்புத்தொகைகள் | **25,552,269** | 24,695,716 |
| நேரடி உடைமை நிறுவனத்திற்குச் சேர வேண்டியவை | **12,192** | 23,358 |
| சம்பந்தப்பட்ட பெருநிறுவனங்களுக்குச் சேர வேண்டியவை | **88,346** | 1,378,708 |
| மற்றக் கடன் பொறுப்புகள் | **189,154** | 187,537 |
| நடப்பு வரி கடன் பொறுப்புகள் | **11,604** | 19,674 |
| ஒத்திவைக்கப்பட்ட வரி | **829** | 2,733 |
| **மொத்தக் கடன் பொறுப்புகள்** | **25,912,787** | 26,379,988 |
| | | |
| **நிகர சொத்துகள்** | **1,751,045** | 1,711,517 |
| | | |
| **சொத்து மதிப்பு** | | |
| பங்கு மூலதனம் | **1,530,000** | 1,530,000 |
| காப்பு இருப்புகள் | **65,412** | 70,899 |
| திரட்டப்பட்ட இலாபங்கள் | **155,633** | 110,618 |
| **மொத்தச் சொத்து மதிப்பு** | **1,751,045** | 1,711,517 |

## மூலதனம் போதிய விகிதங்கள்

MAS-இன் 7-ஆவது உருப்படி, வங்கிகளுக்கான அறிவிப்பு எண் 608-க்கு இணங்க, 31 டிசம்பர்-இல் உள்ள மூலதனம் போதிய விகிதங்கள் மற்றும் கூறுகள்:

| | 2021<br>S$'m | 2020<br>S$'m |
|---|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் | **1,530** | 1,530 |
| வெளிப்படுத்தப்பட்ட இருப்புகள் | **107** | 149 |
| ஒழுங்குமுறை மாற்றங்கள் | **0** | (1) |
| **பொதுச் சொத்து மதிப்பு அடுக்கு 1 மூலதனம்** | **1,637** | 1,678 |
| | | |
| **அடுக்கு 1 மூலதனம்** | **1,637** | 1,678 |
| | | |
| தொகுப்பு மதிப்புக்குன்றுதல் ஒதுக்கீடுகள் | **36** | 45 |
| **அடுக்கு 2 மூலதனம்** | **36** | 45 |
| | | |
| **மொத்த தகுதியுடைய மூலதனம்** | **1,673** | 1,723 |
| | | |
| **இடர் நிறையிடப்பட்ட சொத்துகள் (RWA)** | **9,948** | 10,575 |
| | | |
| **மூலதனம் போதிய விகிதங்கள்** | | |
| பொதுச் சொத்து மதிப்பு அடுக்கு 1 | **16.46%** | 15.87% |
| அடுக்கு 1 | **16.46%** | 15.87% |
| மொத்தம் | **16.82%** | 16.29% |

## இயக்குநர்கள்

இந்த அறிக்கையின் தேதியில் அலுவலகத்தில் உள்ள நிறுவனத்தின் இயக்குநர்கள் பின்வருமாறு:

Fong Mun Ngin, Mervyn
Wong Kee Joo (01 ஜூன் 2021-இல் நியமிக்கப்பட்டார் )
Tay Cheng Kim Karen
Ngan Wan Sing, Winston
(19 மார்ச் 2021-இல் நியமிக்கப்பட்டார் )
Lee Yoke Sim Penny

HSBC

## HSBC Bank (Singapore) Limited நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கான சார்பற்ற கணக்காய்வாளர் அறிக்கை

**நிதிநிலை அறிக்கைகளுக்கான கணக்காய்வு பற்றிய அறிக்கை**

**எங்கள் அபிப்பிராயம்**

எங்கள் அபிப்பிராயப்படி, இதனுடன் கூடிய HSBC Bank (Singapore) Limited-இன் ('நிறுவனம்') நிதிநிலை அறிக்கைகள், நிறுவனச் சட்டம் 1967 ('சட்டம்') வழங்கும் விதிகளுக்கும், சிங்கப்பூர் நிதிநிலை அறிக்கை வரையறைகளுக்கும் ('FRS') இணங்க 31 டிசம்பர் 2021 நிலவரப்படி நிறுவனத்தின் நிதி இருப்பு, நிதியியல் செயல்பாடு, சொத்து மதிப்பு மாற்றங்கள் மற்றும் நிறுவனத்தின் பணப்புழக்கங்கள் ஆகியவை உண்மையான மற்றும் நியாயமான கருத்தைத் தரும் வகையில் அந்த தேதியில் முடிவுற்ற ஆண்டிற்கு முறையாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

நாங்கள் கணக்காய்வு செய்துள்ளவை

நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகளில் உள்ளடங்கியவை:
• 31 டிசம்பர் 2021-இல் முடிந்த ஆண்டிற்கான விரிவான வரவு அறிக்கை;
• 31 டிசம்பர் 2021 நிலவரப்படி நிதி இருப்பு அறிக்கை;
• 31 டிசம்பர் 2021-இல் முடிவடைந்த ஆண்டிற்கான சொத்து மதிப்பு மாற்றங்களின் அறிக்கை;
• 31 டிசம்பர் 2021-இல் முடிவடைந்த ஆண்டிற்கான பணப்புழக்க அறிக்கை; மற்றும்
• முக்கியமான கணக்கியல் கொள்கைகள் உட்பட, நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள்.

**அபிப்பிராயத்தின் அடிப்படை**

நாங்கள் எங்கள் கணக்காய்வை சிங்கப்பூர் தணிக்கை வரையறைகளுக்கு ('SSA') இணங்கச் செய்துள்ளோம். அத்தகைய வரையறைகளின் கீழ் எங்களுக்கு உள்ள பொறுப்புகள் எங்கள் அறிக்கையின் 'கணக்காய்வாளருக்கு நிதிநிலை அறிக்கைகளைக் கணக்காய்வு செய்வதன் மீதானப் பொறுப்புகள்' பகுதியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன.

நாங்கள் பெற்ற கணக்காய்வு சான்றுகள் போதுமானவை என்றும் எங்கள் கருத்துக்கு அடிப்படை வழங்கப் போதுமானவை என்றும் நாங்கள் நம்புகிறோம்.

**சார்பற்றமை**

எங்களது நிறுவனம், பொது கணக்காளர்கள் மற்றும் கணக்கியல் நிறுவனங்களுக்கான கணக்கியல் மற்றும் நிறுவன ஒழுங்குமுறை ஆணைய தொழில்முறை நடத்தை மற்றும் நெறிமுறைகள் ('ACRA விதிகள்') மற்றும் சிங்கப்பூரில் நிதிநிலை அறிக்கைகளைக் கணக்காய்வு செய்வதற்கான நன்னெறித் தேவைகளின் அடிப்படையின் கீழ் இந்நிறுவனத்துடன் சார்பில்லாத நிறுவனம் ஆகும். நாங்கள் இந்தத் தேவைகள் மற்றும் ACRA விதிகளுக்கு இணங்க எங்களுடைய நன்னெறி பொறுப்புகளை முழு நிறைவு செய்திருக்கிறோம்.

**மற்றத் தகவல்**

மற்றத் தகவல்கள் நிர்வாகத்தின் பொறுப்பாகும். மற்றத் தகவல்களில் இயக்குநரின் அறிக்கை மற்றும் MAS 608 துணைத் தகவல் ஆகியவை உள்ளடங்கும். ஆனால் நிதிநிலை அறிக்கை மற்றும் எங்கள் கணக்காய்வாளரின் அறிக்கை இதில் அடங்காது.

நிதிநிலை அறிக்கைகள் பற்றிய எங்கள் அபிப்பிராயம் மற்றத் தகவல்களுக்குப் பொருந்தாது. நாங்கள் அதற்கு எந்தவகையான உறுதி முடிவும் தெரிவிக்கவில்லை.

நிதிநிலை அறிக்கைகளின் கணக்காய்வின் மீதான எங்கள் பொறுப்பு என்பது மற்றத் தகவல்களை வாசித்து, அவ்வாறு வாசிக்கும்போது, அத்தகவல்கள், பொருளாதார ரீதியாக நிதிநிலை அறிக்கைகளுடன் அல்லது கணக்காய்வில் எங்களுக்குக் கிட்டிய அறிவுடன் சீரற்று உள்ளதா எனப் பரிசீலிப்பதும், அல்லது வேறுவகையில் பொருளாதார ரீதியாகத் தவறாக உள்ளதா எனப் பரிசீலிப்பதும் ஆகும். நாங்கள் நிகழ்த்தியுள்ள வேலையின் அடிப்படையில், இந்த மற்ற தகவல்களில் பொருள் தவறாக உள்ளது என்று முடிவெடுத்தால், நாங்கள் இந்த உண்மையை அறிவிக்க வேண்டும். இது தொடர்பாக நாங்கள் அறிவிக்க எதுவும் இல்லை.

**நிர்வாகம் மற்றும் இயக்குநர்களுக்கு நிதிநிலை அறிக்கைகளின் மீதானப் பொறுப்புகள்**

இந்த நிதிநிலை அறிக்கைகள் நிறுவனச்சட்ட விதிகளுக்கும் FRS-களுக்கும் ஏற்றபடி தயாரிக்கப்பட்டு உண்மையான மற்றும் நியாயமான கருத்தை வெளிப்படுத்தும் வகையில் படைக்கப்படுவது நிர்வாகத்தின் பொறுப்பாகும். அதோடு அதிகாரமற்ற உபயோகம் அல்லது விற்பனையில் ஏற்படும் இழப்புகளிலிருந்து சொத்துக்கள் பாதுகாக்கப்படுவதற்கு நியாயமான உறுதியளிக்கக்கூடிய உள் கணக்கு வைப்புக் கட்டுப்பாடுகள் அமைப்பு ஒன்றை ஏற்படுத்திப் பராமரித்தல் மற்றும் பணப்பரிமாற்றங்கள் முறையான அதிகாரம் பெற்று உண்மையான நியாயமான நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கவும் சொத்துகளைக் கட்டிக்காக்கவும் அவசியமான வகையில் பதிவு செய்யப்படுவதை உறுதிப்படுத்துவது ஆகியவையும் இதில் அடங்கும்.

நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கையில், தொடர்ந்து இயங்கும் நிறுவனமாகத் தொடர்வதற்கான நிறுவனத்தின் ஆற்றலை மதிப்பிடல் செய்வதும் நிர்வாகத்தின் பொறுப்பாகும். அவ்வாறு செய்கையில் தொடர்ந்து இயங்கும் நிறுவனம் தொடர்பான விஷயங்களை வெளிப்படுத்துதலும், நிறுவனத்துக்கான கணக்கியல் அடிப்படையில் பயன்படுத்துதலும் நிர்வாகத்தின் பொறுப்பாகும். ஆனால், ஒரு வேளை அந்நிறுவனம் தனது இயக்கத்தை நிறுத்தவோ அல்லது கலைக்கவோ அல்லது அவ்வாறு செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற சூழ்நிலையில் இவ்விதிமுறை பயன்படாது.

நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கையிடல் முறைகளை மேற்பார்வையிடுவது இயக்குநர்களின் பொறுப்புகளில் உள்ளடங்கும்.

**நிதிநிலை அறிக்கைகளைக் கணக்காய்வு செய்வதன் மீதான கணக்காய்வாளருக்கு உள்ள பொறுப்புகள்**

எங்கள் நோக்கங்கள், தயாரிக்கப்படும் நிதிநிலை அறிக்கைகள், மோசடி, பிழை மற்றும் தவறாகப் புரிந்துகொள்ளப்படுவதிலிருந்து விடுபட்டுள்ளன என்பதனை உறுதி செய்வதுடன் கணக்காய்வாளரின் அறிக்கை மற்றும் எங்கள் கருத்தை உள்ளடக்கிய ஒரு தணிக்கையாளரின் அறிக்கையை வெளியிடுவதும் ஆகும். நியாயமான உறுதி என்பது ஒரு உயர் மட்ட உறுதியாகும், ஆனால் SSA-க்கு இணங்க செய்யப்பட்ட கணக்காய்வு பொருளாதார ரீதியான தவறுகள் ஏதேனும் இருப்பின் அதனை எப்போதும் கண்டறியும் என்பது உறுதி கிடையாது. மோசடி அல்லது பிழை மூலமாக ஏற்படும் தவறுடன் கூடிய அறிக்கைகள், தனித்தனியாகவோ அல்லது ஒரு தொகுப்பாகவோ, இந்த நிதிநிலை அறிக்கைகளை அடிப்படையாக வைத்துப் பயனர்கள் எடுக்கும் முடிவுகளில் நியாயமான அளவில் தாக்கங்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கும் பட்சத்தில் அவை பொருளாதார ரீதியான தவறுகள் எனக் கருதப்படும்.

SSA-க்கு இணங்க நாங்கள் செய்த ஆய்வின் ஒரு பகுதியாக, இந்த கணக்காய்வு முழுவதும் தொழில்முறை நியாயத்தீர்ப்பைக் கையாண்டதுடன் தொழில்முறை ஐயறவையும் பேணி வந்தோம். மேலும் நாங்கள்:

- மோசடி அல்லது பிழையால் நிதி அறிக்கைகளில் விவரப்பிழைகள் நேரக்கூடிய அபாயத்தை அடையாளம் கண்டு, மதிப்பிட்டு, இந்த இடர்களுக்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை மேற்கொண்டு, எங்கள் கருத்துக்கு அடிப்படை வழங்குவதற்குப் போதுமான பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெறவேண்டும். பிழையால் நேரும் விவரப்பிழையை விட மோசடியால் நேரும் விவரப்பிழையை அடையாளம் காணாதிருக்கக்கூடிய அபாயம் அதிகம். ஏனெனில் மோசடியில் கூட்டுச்சதி, ஏமாற்று, வேண்டுமென்றே செய்யப்பட்ட விடுபாடுகள், பிறழ் கூற்று அல்லது உள் கட்டுப்பாடு மீறல் ஆகியவை இருக்கக்கூடும்.
- சூழலுக்கு ஏற்றவாறு கணக்காய்வு முறைகளை வடிவமைப்பதற்காக, கணக்காய்வு தொடர்புடைய உட்கட்டுப்பாடு பற்றிய புரிந்துணர்வைப் பெறவேண்டும். ஆனால், இது நிறுவனத்தின் உட்கட்டுப்பாட்டின் செயல்திறனைப் பற்றி அபிப்பிராயம் வெளிப்படுத்தும் நோக்கத்துக்காக அல்ல.
- பயன்படுத்தப்படும் கணக்கியல் கொள்கைகளின் பொருத்தத்தையும் நிர்வாகத்தால் செய்யப்பட்டுள்ள கணக்கியல் கொள்கைகள் மற்றும் தொடர்புடைய வெளிப்பாடுகள் ஆகியவற்றின் நியாயத்தன்மையையும் மதிப்பாய்வு செய்யவேண்டும்.
- நடைபெற்றிருக்கும் நிகழ்வுகள் தொடர்பில் ஒரு பொருளாதார உறுதியற்ற நிலை இந்நிறுவனத்திற்கு இருந்தாலோ அல்லது தொடர்ந்து இயங்கும் நிறுவனமாக இயங்குவதற்கு வேண்டிய இந்நிறுவனத்தின் திறனில் குறைபாடு இருந்தாலோ, பெறப்பட்ட கணக்காய்வு ஆதாரத்தின் அடிப்படையில் தொடர்ந்து இயங்கும் நிறுவனம் என்ற அடிப்படையிலான கணக்கியலை நிர்வாகம் பயன்படுத்தியுள்ளதன் பொருத்தத்தைப் பற்றி முடிவு செய்யவேண்டும். பொருளாதார உறுதியற்ற தன்மை இருப்பதாக நாங்கள் முடிவு செய்தால், நாங்கள் எங்கள் கணக்காய்வு அறிக்கையின் நிதிநிலை அறிக்கைகளில் உள்ள தொடர்புடைய வெளிப்பாடுகளில் கவனத்தை ஈர்க்க வேண்டும் அல்லது, அத்தகைய வெளிப்பாடுகள் போதுமானதாக இல்லாத பட்சத்தில் எங்கள் அபிப்பிராயத்தை மாற்றவேண்டும். எங்கள் முடிவுகள் அனைத்தும் இக்கணக்காய்வு அறிக்கையின் தேதி வரையில் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினை அடிப்படையாகக் கொண்டவை. இருப்பினும், வருங்காலத்தில் ஏற்படும் நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் இந்நிறுவனத்தைத் தொடர்ந்து இயங்க முடியாமல் நிறுத்தலாம்.
- வெளிப்பாடுகள் உள்ளிட்ட நிதிநிலை அறிக்கையின் உள்ளடக்கம், அமைப்பு மற்றும் ஒட்டுமொத்த காட்சியளிப்பை மதிப்பிடுதல் மற்றும் நிதிநிலை அறிக்கைகள் அடிப்படைப் பரிவர்த்தனைகளையும் நிகழ்வுகளையும் நியாயமான காட்சியளிப்புக்கு ஏற்ற முறையில் குறிக்கின்றனவா என மதிப்பிடவேண்டும்.

நாங்கள் இயக்குநர்களுடன் மற்ற விஷயங்களோடு, கணக்காய்வுக்குத் திட்டமிடப்பட்டுள்ள செயற்பரப்பு மற்றும் காலம் இவற்றுடன் எங்கள் கணக்காய்வின் போது நாங்கள் அடையாளம் கண்ட உட்கட்டுபாடுகளில் உள்ள ஏதேனும் முக்கிய குறைபாடுகள் உள்ளிட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள் ஆகியன தொடர்பாகத் தொடர்புகொள்கிறோம்.

**மற்ற சட்டம் மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் குறித்த அறிக்கை**

எங்கள் அபிப்பிராயத்தின்படி, இந்நிறுவனம் சட்டப்படி வைத்திருக்க வேண்டிய கணக்கியல் மற்றும் மற்றப் பதிவேடுகள் அனைத்தும் சட்ட விதிகளின்படி முறையாக வைத்திருக்கப்பட்டிருக்கின்றன.

PricewaterhouseCoopers LLP
பொதுக் கணக்காளர்கள் மற்றும் பட்டயக் கணக்கறிஞர்கள்

சிங்கப்பூர், 11 பிப்ரவரி 2022

HSBC Bank(Singapore) Limited நிறுவனத்தால் வெளியிடப்படுகிறது (நிறுவனப் பதிவு எண். 201420624K).